# காத்திருந்தோம் காத்திருந்தோம் தெய்வமே

காத்திருந்தோம் காத்திருந்தோம் தெய்வமே
காலமெல்லாம் காத்திருந்தோம் தெய்வமே
புலரும் பொழுது விடியுமென்று
காவலிலிருந்தோம் புது ஒளியைக் காண்பதற்கு
ஏங்கி நின்றோம் தெய்வமே - ( 2 )

1
நம்பிக்கையை வளர்திருந்தோம் தெய்வமே
நல்லகாலம் பிறக்குமென்று தெய்வமே
நாடியதும் தேடியதும் உன் வடிவில் கூடியே
நாளும் காக்கும் என்றிருந்தோம் தெய்வமே
நின்மதி தந்திடும் எங்கள் தெய்வம் தோன்றுமென்று
(காத்திருந்தோம்....)

2
நல்ல செய்தி எளியவர்க்கு வந்திடும்
நானிலத்தில் விடுதலையைத் தந்திடும்
நேர்மை நிறைப் பார்வை கொண்டு
நேர்வழியில் செல்லவே
நல்ல தெய்வம் முன் நடந்து சென்றிடும்
நம்மிலே புவியிலே இல்லமதைக் கொள்ளுமென்று
(காத்திருந்தோம்....)